மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2019), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2019)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, சொல்லுங்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர்*

@ 19–7–2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அவர்களே, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத் திருத்தம், பிரிவு 49 மற்றும் 50–ல் செய்யப்படும் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய திருத்தங்கள் என்றாலும், இதில் நோக்கக் காரண விளக்கத்தில் 3% தான் மாற்றுத்திறனாளிகள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு மத்திய மாற்றுத்திறனாளிகள் சட்டத்தில் 21 அங்கம் குறைவுள்ளவர்களை மாற்றுத்திறனாளிகளாகச் சேர்க்க வேண்டுமென்று சட்டம் இயற்றியுள்ளார்கள். ஆகவே, அதையும் சேர்த்தால் இதில் கிட்டத்தட்ட 5% அளவிற்கு மாற்றுத்திறனாளிகள் வரக்கூடும் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், 2012 ஆம் ஆண்டு ஐ.நா.–வின் சார்பில் கொரியாவில் அந்த மாநாடு நடைபெற்றபோது, நாட்டினுடைய உரிமைகள், உண்மையான அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் அதிகாரம் பெற வேண்டுமென்றால் மாற்றுத்திறனாளிகளுக்கு இடஒதுக்கீடு என்பது, வேலைவாய்ப்பில் மட்டுமல்லாது, அரசியல் அதிகாரப் பகிர்வும் வேண்டும் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதேபோல், ஐ.நா. உரிமை உடன்படிக்கை சரத்து 29 (அ) மற்றும் (ஆ) பிரிவில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்ற ஒரு தீர்மானமும் ஐ.நா.–வால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதோடு, நம்முடைய அரசமைப்புச் சட்டப் பிரிவு 15 மற்றும் 16 அதாவது சமத்துவத்தை அறிவுறுத்தும் பிரிவிற்கு எதிராக அமையக் கூடாது என்பதால் மாற்றுத்திறனாளிகளுடைய சட்டத்தை உடைக்க ஐ.நா. மாற்றுத்திறனாளிகளின் உரிமை உடன்படிக்கையில் 2007 ஆம் ஆண்டில் இந்தியாவும் கையெழுத்திட்டிருக்கின்றது.

ஆகவே, இன்றைக்குக்கூட மாற்றுத்திறனாளிகள் தங்கள் உரிமைக்காக அவர்கள் குரல் எழுப்புகின்ற தலங்களாகத்தான் தமிழ்நாடு காணப்படுகிறதேதவிர, அவர்களுடைய உரிமை முழுவதுமாக இன்னும் நிறைவேறாத ஒரு சூழ்நிலைதான் நிலவிக் கொண்டிருக்கின்றது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், மலேசியாவிலே ஒரு மாற்றுத்திறனாளி பெண், பத்மாவதி கிருஷ்ணன் என்பவர், பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற I.A.S., தேர்வில் ஜாரா சிங்கால் என்ற மாற்றுத்திறனாளி இந்தியாவிலேயே முதல் I.A.S. ஆகத் தேர்வு செய்யப்பட்டார். இப்படிப்பட்ட செய்திகளெல்லாம் நம்முடைய தமிழ்நாட்டிலும் நிலவ வேண்டும்;

வாய்ப்புகள் கிடைக்க வேண்டும்; எதிரொலிக்க வேண்டும் என்றால், உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்குக் குறைந்தது 5 சதவிகித இடஒதுக்கீடாவது தந்தால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய உரிமைகள், போராட்டத் தலங்கள் முழுமையாக நிறைவுபெறும் என்பதையும், மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் ஒளி பிறக்கும் என்பதையும் தெரிவித்து, இந்தச் சட்டத் திருத்தத்தோடு சேர்ந்து, வெகு விரைவில் நடைபெறவிருக்கின்ற உள்ளாட்சித் தேர்தல்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு 5 சதவிகித இடஒதுக்கீட்டை வழங்குகின்ற சட்டமுன்வடிவையும் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்கள் ஏதோ சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னைப் பார்த்துதானே பேசுகிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார் என்றால், 'நீங்கள் ஆட்சிக்கு வந்துவிடுவீர்கள், அப்பொழுது இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வாருங்கள்' என்கிற மாதிரி, ஜாடையாகச் சொல்கிறார். எது எப்படியோ, மாற்றுத்திறனாளிகளுக்குண்டான 5 சதவிகித இடஒதுக்கீட்டை விரைவில் அமல்படுத்துகின்ற நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத் திருத்த மசோதாவில் என்னுடைய கருத்தாகப் பதிவு செய்து அமைகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் அவர்கள் Court–க்குப் போவார்கள் என்றுதான் சொன்னேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் ஓர் அற்புதமான சட்டம். இந்தச் சட்டம், காது கேளாதவர் மற்றும் வாய் பேசாதவர், தொழுநோயாளிகள் ஆகியோர் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட வழிவகை செய்வதற்குரிய சட்டம் ஆகும். தமிழ்நாட்டின் மக்கள்தொகையில் 3 சதவிகிதத்தினர் மாற்றுத்திறனாளிகளாக உள்ளனர். மாற்றுத்திறனாளிகளிடையே பெரும்பான்மையான மக்கள் உயர் கல்வித் தகுதி பெற்றவர்களாகவும் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் திறமை கொண்டவர்களாகவும் உள்ளனர். 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 4/1919) மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 5/1920)—ன்கீழ் நடைபெறும் தேர்தல்களில் காது கேளாதவர், வாய் பேசாதவர் அல்லது தொழுநோயாளிகள் பிரிவைச் சேர்ந்த மக்கள், தேர்தலில் போட்டியிட தகுதி குறைபாடுடையவர்களாக இருக்கிறார்கள். எனவே, அரசானது, தமிழ்நாடு சட்டம், 4/1919, பிரிவு 52 உட்பிரிவு 2, கூறு A மற்றும் பிரிவு 53, உட்பிரிவு 1 கூறு B மற்றும் தமிழ்நாடு சட்டம், 5/1920 பிரிவு 49 உட்பிரிவு 2, கூறு A மற்றும் பிரிவு 50, உட்பிரிவு 1 கூறு B—ல் 'காது கேளாத மற்றும் வாய் பேசாத மற்றும் தொழுநோயாளிகள்' என்ற சொற்றொடரை நீக்க முடிவு செய்தது.

இது ஒரு முக்கியமான சட்டமுன்வடிவு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவில் பேசும்போது நிறைய கருத்துகளைத் தெரிவித்தபோது இதையும் வரவேற்றார். மேலும், உள்ளாட்சித் தேர்தல்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு 5 சதவிகித இடஒதுக்கீட்டை வழங்குகின்ற சட்டமுன்வடிவையும் கொண்டு வர வேண்டுமென்று advice செய்திருக்கிறார். இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். எனவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2019) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2019), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,